INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**ஊடக அறிக்கை: ஆட்சி மாற்றத்தில் தப்பிப்பிழைக்கும் இலங்கையின் சித்திரவதையாளர்கள்**

**18 செப்டெம்பர் 2019**

***ஜெனீவா:*** சித்திரவதைகளில் சம்பந்தப்பட்டதாக குற்றச்சாட்டப்பட்டவர்கள் என தெரிந்தும் தற்போதைய அரசாங்கம் உட்பட அடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் பொலிசாருக்கு மீண்டும் மீண்டும் பதவியுயர்வு வழங்கியுள்ளனர். சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் இலங்கைப் பொலிசின் பயங்கரவாத விசாரணை பிரிவு பற்றிய புதிய ஆய்வு ஒன்றினை மேற்கொண்டு செவ்வி காணப்பட்ட பாதிக்கப்பட்ட 73 நபர்களால் பெயர்குறிப்பிடப்பட்ட கட்டளை நிலையில் உள்ள அதிகாரிகள் உட்பட 58 குற்றஞ்சாட்டப்பட்ட சித்திரவதையாளர்களை அடையாளங் கண்டுள்ளது. இவர்களில் பத்து வருடங்களுக்கு முன்னதாக ஐநா அறிக்கைகளில் அடையாளங்காணப்பட்ட பொலிஸ் அதிகாரிகளும் உள்ளடங்குகின்றார்கள், அவர்களில் ஒருவர் ஐநாவின் அமைதிகாக்கும் படையில் கூட இருந்தார்.

*“பொலிசாரின் சித்திரவதைகள் பற்றிய தொடர்ச்சியான குற்றச்சாட்டுகள் அலட்சியப்படுத்தப்படுகின்றமை அதிர்ச்சியளிப்பதாக உள்ளது அத்துடன் இது பாதுகாப்பு பிரிவின் மறுசீரமைப்பு பற்றி இலங்கையினால் கூறப்பட்ட வாக்குறுதியினையும் , நிலைமாற்று நீதியையும் கேலிக்கூத்தாக்குகின்றது” என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார். “சித்திரவதையில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட TID அதிகாரிகள் 2007 ஐ.நா நிபுணர் அறிக்கையிலும், 2015 ஐ.நா விசாரணையிலும் , அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைகள் வழக்கறிகளினால் பல தசாப்தங்களாகவும் அத்துடன் தற்போது 2019 இல் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் அந்த வழக்கிற்கு ஆதரவாக கலிபோர்னியாவில் ITJP இனால் சமர்ப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆவணங்களிலும் பெயரிடப்பட்டுள்ளனர் - ஆனால் எந்த நடவடிக்கையும் ஒரு போதும் எடுக்கப்படவில்லை. குற்றஞ்சாட்டப்பட்ட சித்திரவதையாளர்கள் ஒவ்வொரு ஆட்சி மாற்றத்திலும் தொடர்ந்தும் தப்பி பிழைத்துவருகின்றனர”.*

ITJP இனுடைய இந்த புதிய அறிக்கையானது கொழும்பிலுள்ள TID அலுவலகம் மற்றும் காலியிலுள்ள பூசா தடுப்பு முகாம் என்பவற்றில் TID இனரால் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட மிருகத்தனமான சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்கொடுமை போன்றவற்றின் விபரங்களைக் கொண்டுள்ளது. இந்த அறிக்கையில் பாதிக்கப்பட்டவர்களால் பெயர் குறிப்பிடப்பட்ட தனித்தனியான பொலிசார் பற்றிய 24 ஆவணக் கோவைகளை காணலாம். இவை அமெரிக்காவில் கோஸ்பெல்ட் என்ற சட்ட நிறுவனத்தினால் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அமெரிக்க[1] நீதிமன்றத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பிப்பின் ஒரு பகுதியாகும்.

[1] http://www.itjpsl.com/assets/press/ECF-No.-0066-3-Exhibit-B-to-Sooka-Decl.pdf சுட்டி B இன் http://www.itjpsl.com/reports/gotabaya-rajapaksa-complaint

*“பயங்கரவாத விசாரணைப் பிரிவில் சித்திரவதை என்பது மிகவும் பொதுவானதாக உள்ளது, இதனால் இந்த பிரிவில் பணியாற்றும் எவராயினும் குற்றச் செயல்களில் சம்பந்தப்படாமல் இருப்பது சாத்தியமல்ல” என சூக்கா தெரிவித்தார். குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் வரை TID இன் உறுப்பினர்கள் சர்வதேச பயிற்சி நிகழச்சித் திட்டங்கள், ஐநா அமைதிகாக்கும் பணி மற்றும் ஏனைய சர்வதேச உதவிகளில் கிடைக்கப் பெறுதல் போன்றவற்றில் இருந்து தடைசெய்யப்பட வேண்டும். பயிற்சித் திட்டங்களை மேற்கொள்வதால் மட்டும் பாதுகாப்பு படைகளின் இந்தப் பிரிவில் உள்ள இந்தப் பிரச்சினையை சரிசெய்ய முடியாது.”*

தடுத்து வைக்கப்பட்டவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டு பேருந்துகளில் TID இனரின் இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அல்லது வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு , நிர்வாணமாக்கப்பட்டு, மலவாசல் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு , இரத்தக்கறை படிந்த சுவர்களையும் சித்திரவதைக்கான உபகரணங்களையும் கொண்ட அறைகளில் வைத்து விசாரிக்கப்பட்டு , அவர்கள் செய்யாதவற்றை ஒப்புக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் பார்வையிட வரும் அதிகாரிகளுக்கு சித்திரவதை பற்றி சொல்லக்கூடாது எனவும் எச்சரிக்கப்பட்டதாக அவர்கள் விபரிக்கின்றார்கள். இந்த அறிக்கையிலுள்ள 21 பொதுமக்கள் உட்பட்ட 73 பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கப்பட்டு, உதைக்கப்பட்டு, குத்தப்பட்டு, சாட்டையடி கொடுக்கப்பட்டு கட்டித் தூக்கப்பட்டு, பெற்றோல் மற்றும் மிளகாய்தூளில் தோய்க்கப்பட்ட பிளாஸ்டிக் பைகளால் மூச்சுத்திணறச் செய்யப்பட்டு தண்ணீர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு சிகரெட்டினால் சுடப்பட்டு , சூடாக்கிய இரும்புக் கம்பிகளால் சுடப்பட்டு பாலியல் வன்புணர்விற்கும் மற்றும் ஏனைய பாலியல் வன்முறைகளுக்கு உட்பட்டதாக விபரிக்கின்றார்கள். சிலர் வெவ்வேறு பாதுகாப்பு பிரிவுகளால் நடாத்தப்படும் பல தடுப்பு முகாம்களில் பல வருடங்களாக வைக்கப்பட்டார்கள், மற்றவர்கள் முன்னாள் போராளிகளுக்கான “புனர்வாழ்வு” நிகழ்ச்சித்திட்டம் அல்லது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் TID இனரால் கடத்தப்பட்டார்கள். செவ்வி காணப்பட்டவர்களில் 20 பாதிக்கப்பட்டவர்களாவது சித்திரவதையின் பின்னர் தற்கொலைக்கு முயற்சி செய்தார்கள்.

*“அப்பாவிகள்” என கருதப்படும் பொதுமக்களைப் அனுபவிக்கும் மனித உரிமைகளைப் போல் பயங்கரவாதிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனுபவிக்க முடியாது என்ற ஒரு கருத்து சில பிரிவினர் இடையே பரவலாக இருந்தது. தாங்கள் சமச்சீரற்ற போரில் ஈடுபட்டமையால் அப்பாவி பொதுமக்களை இலக்குவைத்தல் என்ற போர்ச் சட்டங்கள் இடைநிறுத்தப்பட வேண்டும் என 2009 இல் இலங்கையினால் மேற்கொள்ளப்பட்ட முன்னைய நியாயப்படுத்தலை இது எதிரொலிப்பதாக உள்ளது. இது சட்டத்திற்கு முரணானது மட்டுமில்லாமல் தார்மீக ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்கதும் அல்ல. இந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ள பயங்கர மற்றும் திட்டமிட்ட கொடுமைகளுக்கு எதிராக இலங்கையர்கள் அனைவரும் உரக்க தமது குரல்களை எழுப்ப வேண்டும். பத்து வருடங்களுக்கும் மேலாக அமைதி எவ்வாறாயினும் எவர் காதிலும் விழவில்லை” என சூக்கா தெரிவித்தார்.*

குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளில் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டியவர்கள்:

**நந்தன முனசிங்க,** தற்போதைய வட மத்திய மற்றும் வடமேல் மகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர், 2008 சித்திரவதைகளுக்கான ஐ.நாவின் விசேட பிரிதிநிதியால் சித்திரவதையில் சம்பந்தப்பட்டவர் என பெயரிடப்பட்டவர், (சுட்டி பி , பெயர்வெளியிடப்படாத பிரகடனம், ITJP இணையத்தளம் , பக்கங்கள் 89 - 93),

**அடம்பெரக றுவான் பிரசன்ன ஜெயக் டி அல்விஸ்,** முன்னைய TID இன் பணிப்பாளர் , தற்போது கொழும்பு குற்றப் பிரிவில் உள்ளார், இந்த அறிக்கையிலுள்ள 10 பாதிக்கப்பட்டவர்களால் அடையாளங்காணப்பட்டவர் அத்துடன் 1998 இல் ஒரு அரசசார்பற்ற நிறுவன அறிக்கையில் பெயரிடப்பட்டவர் ( சுட்டி பி , பெயர்வெளியிடப்படாத பிரகடனம், ITJP இணையத்தளம் , பக்கங்கள் 43 – 56),

**லால் கமகே,** முன்பு பூசா தடுப்பு முகாமிற்கு பொறுப்பான அதிகாரியாக இருந்தார், தற்போது யாழ்ப்பாணத்தில் பணிபுரிகின்றார், சித்திரவதையில் நேரடியாக ஈடுபட்டதாக இந்த அறிக்கையில் 9 பாதிக்கப்பட்டவர்களால் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளார். (சுட்டி பி , பெயர்வெளியிடப்படாத பிரகடனம், ITJP இணையத்தளம் , பக்கங்கள் 80 -85)

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT